**ஆகஸ்ட் – 06**

# TNPSC துளிகள்


- அசாம் மாநிலத்தின் கோல்பாரா மாவட்டத்தில் தோண்டப்பட்ட கிணறுகளுடன் இணைக்கப்பட்ட நிலத்தடி நீர்நிலைகளில் 'ரக்தமிக்திஸ் அஞ்சி' (Rakthamichthys anchi) என்று பெயரிடப்பட்ட பார்வையற்ற, இரத்தச் சிவப்பு நிற விலாங்கு மீனின் புதிய இனம் ஒன்றை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
    - இந்த இனம் ரக்தமிக்திஸ் பேரினத்தைச் சேர்ந்ததுடன், இது இந்தியாவுக்கே உரிய நிலத்தடி சதுப்புநில விலாங்கு மீன்களின் குழுவாகும்.
- தொல்லுயிரியல் ஆய்வாளர் வர்ஷா அசோக் அக்லாவே, இந்திய நிலவியலாய்வு மையத்தின் (GSI) 176 ஆண்டுகால வரலாற்றில் அதன் முதல் பெண் தலைமை இயக்குநராக (DG) பதவியேற்றுள்ளதோடு இவர் ஆசித் சஹாவிற்குப் பிறகு 54வது தலைமை இயக்குநராக பொறுப்பேற்றுள்ளார்.
- ஆந்திரப் பிரதேசத்தின் போகாபுரத்தில் உள்ள அல்லூரி சீதாராம ராஜு சர்வதேச விமான நிலையத்தில் 13,000-க்கும் மேற்பட்ட பழங்குடியினப் பெண்கள் மற்றும் மாணவிகள் 'திம்சா' (Dhimsa) நடனமாடி, மிகப்பெரிய திம்சா நடனத்திற்கான கின்னஸ் உலக சாதனையை படைத்தனர்.
- இந்தியாவின் பகிர்ந்தளிக்கப்பட்ட சூரியசக்தித் திறன் 2026 ஆம் நிதியாண்டில் 31.5 ஜிகாவாட் (GW) ஆக அதிகரித்துள்ளது, இது 2018 ஆம் நிதியாண்டில் இருந்த 1.8 ஜிகாவாட்டில் இருந்து 17 மடங்குக்கும் மேலான அதிகரிப்பாகும்.
    - மேற்கூரை சூரியசக்தித் திறன் 1.1 ஜிகாவாட்டில் (2018 ஆம் நிதியாண்டு) இருந்து 25.7 ஜிகாவாட்டாக (2026 ஆம் நிதியாண்டு) அதிகரித்துள்ளது, அதே வேளையில் PM-KUSUM திட்டத்தின் கீழ் சூரியசக்தி நீரேற்றிகளின் திறன் 5.8 ஜிகாவாட்டை எட்டியுள்ளது.
- போபாலில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி சபை (ICAR) - தேசிய உயர் பாதுகாப்பு விலங்கு நோய்கள் நிறுவனமானது (NIHSAD), பன்றிகளுக்கான இந்தியாவின் முதல் உள்நாட்டு 'MA-104' செல் வரிசையை அடிப்படையாகக் கொண்ட, வீரியம் குறைக்கப் பட்ட ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சலுக்கான (ASF) தடுப்பூசியை உருவாக்கி உள்ளது.
    - ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சல் (ASF) என்பது ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சல் வைரஸால் (ASFV) ஏற்படும் மிகவும் தொற்றுத்தன்மை வாய்ந்த வைரஸ் நோயாகும், இது வீட்டு மற்றும் காட்டுப் பன்றிகளைப் பாதிக்கிறது, இதன் இறப்பு விகிதம் 100% ஐ எட்டும் அபாயம் கொண்டது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் உடல் உறுப்பு தான மைல்கல்

- இந்தியா தனது 16வது இந்திய உடல் உறுப்பு தான தினத்தை அனுசரித்து சாதனை அளவிலான உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சாதனைகளை முன்னிலைப் படுத்துவதுடன், உடல் உறுப்பு தானத்தை வலுப்படுத்த புதிய முயற்சிகளையும் தொடங்கியுள்ளது.
- இந்தியா 2025 ஆம் ஆண்டில் சாதனை அளவாக 20,138 உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளதுடன் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 4,990 அறுவை சிகிச்சைகளுடன் ஒப்பிடுகையில், இதுவே ஒரே ஆண்டில் நடைபெற்ற மிக அதிக அளவிலான அறுவை சிகிச்சையாகும்.

- ❖ 2023 ஆம் ஆண்டில் தேசிய டிஜிட்டல் உறுதிமொழி இணையதளம் தொடங்கப்பட்டதில் இருந்து, ஆதார் மூலம் சரிபார்க்கப்பட்ட உடல் உறுப்பு தான உறுதிமொழிகளின் எண்ணிக்கை இந்தியாவில் 5 லட்சத்தைக் கடந்துள்ளது.
- ❖ மொத்த உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கையில் அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா உலகளவில் 3வது இடத்தில் உள்ளதோடு மேலும் உயிருள்ள கொடையாளர்களின் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியா உலகளாவிய அளவில் முன்னணியில் உள்ளது.
- ❖ உடல் உறுப்பு தான சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்காக 'ஜக் ஜக் ஜியோ அபியான்' (Jug Jug Jiyo Abhiyaan), e-Pratyaropan டிஜிட்டல் தளம் மற்றும் தேசிய உடல் உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு (NOTTO) அலைபேசி செயலி ஆகியவற்றை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்தியா முழுவதும் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நடைமுறைகளை தரப்படுத்துவதற்காக தேசிய மூளைத் தண்டு இறப்புச் சான்றிதழ் வழிகாட்டுதல்கள் மற்றும் மாற்று அறுவை சிகிச்சைக்கான தேசிய வழிகாட்டுதல்களையும் அரசாங்கம் வெளியிட்டது.




## இந்தியாவின் முதல் தொலைத்தொடர்பு உற்பத்தி மண்டலம்

- ❖ இந்தியாவின் முதல் தொலைத்தொடர்பு உற்பத்தி மண்டலம் - மத்தியப் பிரதேசத்தின் குவாலியரில் நிறுவப்படும்.
- ❖ இதனை, தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள தொலைத்தொடர்புத் துறை (DoT) மேற்கொள்ளும்.
- ❖ இந்தியா, தற்போதுள்ள சுமார் 50 கோடி பயனர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி, 2030-ஆம் ஆண்டுக்குள் 100 கோடி (1 பில்லியன்) மக்களை 5ஜி தொழில்நுட்பத்துடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தியா மொபைல் காங்கிரஸ் 2026-இன் 10-வது பதிப்பிற்கான கருத்துருவை மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் வெளியிட்டார் ('எல்லைகளற்ற வளர்ச்சி').
- ❖ புது தில்லியில் நடைபெறவுள்ள ஆசியாவின் மிகப்பெரிய டிஜிட்டல் தொழில்நுட்ப மன்றத்தின் ஒரு மைல்கல் பதிப்பு இதுவாகும்.
- ❖ இந்தியா மொபைல் காங்கிரஸ் (IMC) 2026-இன் 10-வது பதிப்பு நான்கு முக்கிய தூண்களை மையமாகக் கொண்டுள்ளது.

- இது, டிஜிட்டல் முறையில் வலுவூட்டப்பட்ட, பாதுகாப்பான மற்றும் வளர்ச்சி சார்ந்த எதிர்காலத்தை உருவாக்கும் இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையைப் பிரதிபலிக்கிறது.
- 'சிருஷ்டி – எதிர்காலத்தை உருவாக்குதல்', இது அடுத்த தலைமுறை டிஜிட்டல் உள் கட்டமைப்பை வடிவமைக்கும் புத்தாக்கம், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் தீர்வுகளை வளர்ப்பதில் கவனம் செலுத்தும்.
- சுரக்ஷா – நம்பிக்கையை வலுப்படுத்துதல், இது பாதுகாப்பான, மீள்திறன் கொண்ட மற்றும் நம்பகமான டிஜிட்டல் சூழல் அமைப்புகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும்.
- சஷக்த் – வாய்ப்புகளை விரிவுபடுத்துதல், இது டிஜிட்டல் வாய்ப்புகளுக்கான அனைவரையும் உள்ளடக்கிய அணுகலை உறுதி செய்வதோடு, குடிமக்கள், வணிகங்கள், புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் சமூகங்களுக்கு அதிகாரம் அளிக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சம்வர்தன் – வளர்ச்சியை ஊக்குவித்தல், இது பொருளாதார வளர்ச்சி, முதலீடு, தொழில்முனைவு, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் இந்தியா ஒரு உலகளாவிய தொழில்நுட்பத் தலைவராக உருவெடுப்பதில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் பங்கை எடுத்துரைக்கும்.




# பொருளாதாரச் செய்திகள்

## முழுமையான வங்கிச் சேவைக்கான இலக்கு

- 5 கிலோமீட்டர் சுற்றளவுக்குள் வங்கிச் சேவை மையத்தைக் கொண்ட 99.92% மக்கள் வசிக்கும் கிராமங்களுடன், இந்தியா ஏறக்குறைய முழுமையான வங்கிச் சேவைத் பரவலை எட்டியுள்ளது.
- மக்கள் வசிக்கும் 6,01,328 கிராமங்களில், 6,00,868 கிராமங்கள் வங்கி கிளை, வணிகத் தொடர்பாளர் (BC) அல்லது இந்திய அஞ்சல் கட்டண வங்கி (IPPB) மையம் ஆகியவற்றால் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- இந்த வங்கி வலையமைப்பில் 1.81 லட்சத்திற்கும் மேற்பட்ட வங்கி கிளைகள், 17.36 லட்சம் வணிகத் தொடர்பாளர்கள் மற்றும் 1.65 லட்சம் இந்திய அஞ்சல் கட்டண வங்கி மையங்கள் உள்ளன.
- பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா (PMJDY) திட்டத்தின் கீழ், 58.77 கோடி வங்கி


கணக்குகள் திறக்கப்பட்டு, அவற்றில் ₹3,12,414 கோடி வைப்புத்தொகை உள்ளது (2026 ஆம் ஆண்டு ஜூலை 17 நிலவரப்படி).

- மக்கள் வசிக்கும் ஒவ்வொரு கிராமத்தின் 5 கி.மீ எல்லைக்குள் வங்கிச் சேவை மையத்தை வழங்குவதை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) நோக்கமாகக் கொண்டுள்ளதுடன். மேலும் புதிய கிளைகளில் 25% வங்கியற்ற கிராமப்புற மையங்களில் திறக்கப்பட வேண்டும் என கட்டாயப்படுத்துகிறது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### புலிகள் காப்பக அறிக்கை 2026





- 2022 ஆம் ஆண்டின் அகில இந்தியப் புலிகள் மதிப்பீட்டின் அடிப்படையில் "Roadmap for Active Management of Tigers in India என்ற அறிக்கையை தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA) வெளியிட்டது.
- இந்தியாவின் புலிகள் காப்பகங்களில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு (58 இல் 38) காப்பகங்களில் இரைத் தளம் குறைந்து வருகிறது, மோசமான வாழ்விடத் தரம் அல்லது இரண்டும் காணப்படுவதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- 20 புலிகள் காப்பகங்கள் மட்டுமே போதுமான இரை மற்றும் நல்ல வாழ்விடத்தைக்

கொண்டுள்ள அதே சமயம் 36 காப்பகங்கள் கடும் இரை பற்றாக்குறையை எதிர் கொள்கின்றன மற்றும் 17 காப்பகங்கள் மோசமான வாழ்விடம் மற்றும் போதிய இரையின்மை ஆகிய இரண்டையும் கொண்டுள்ளன.

- ஒன்பது புலிகள் காப்பகங்களில் புலிகளின் எண்ணிக்கை பூஜ்ஜியமாக அல்லது மிகக் குறைவான அளவிலேயே உள்ளன, மேலும் 25 காப்பகங்களில் புலிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.
- இந்தியாவில் மதிப்பிடப்பட்ட 3,682 புலிகள் உள்ளன, இவற்றில் 2,338 புலிகள் காப்பகங்களுக்கு உள்ளேயும் 1,344 புலிகள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியேயும் உள்ளன; உலகின் காட்டுப் புலிகளில் சுமார் 75% இந்தியாவில் காணப் படுகின்றன.
- புலிகள் பாதுகாப்பை மேம்படுத்த வாழ்விட மறுசீரமைப்பு, இரை மீட்பு, வேட்டையாடுதல் தடுப்பு நடவடிக்கைகள், ஆக்கிரமிப்பு இனங்களை அகற்றுதல் மற்றும் வனவிலங்கு வழித்தடங்களை பாதுகாத்தல் ஆகியவற்றை இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.

## 101வது ராம்சார் தளம் - க்லாவ் ஏரி





- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள க்லாவ் ஏரி இந்தியாவின் 101வது ராம்சார் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இது அம்மாநிலத்தின் முதல் ராம்சார் தளமாகும்.
- இதன் மூலம், 2014 ஆம் ஆண்டில் 26 ஆக இருந்த இந்தியாவின் மொத்த ராம்சார் தளங்களின் எண்ணிக்கை தற்போது 101 ஆக உயர்ந்துள்ளது.
- க்லாவ் ஏரி என்பது கிழக்கு இமயமலையில் உள்ள கம்லாங் புலிகள் காப்பகம் மற்றும் வனவிலங்கு சரணாலயத்தின் உள்ளே அமைந்துள்ள ஒரு தூய்மையான நன்னீர் ஏரியாகும்.
- இந்த ஈரநிலம் ஒரு பல்லுயிர் பெருக்க மையமாகவும், அதன் நீர்ப்பிடிப்பு பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 150 க்கும் மேற்பட்ட மர வகைகளுக்கும் 49 ஆர்க்கிட் வகைகளுக்கும் ஆதரவளிக்கிறது.
- ராம்சார் தளம் என்ற அங்கீகாரம் ஈரநிலப் பாதுகாப்பு, பல்லுயிர் பாதுகாப்பு, நீர்

மற்றும் பருவநிலை பாதுகாப்பு மற்றும் நிலையான வாழ்வாதாரங்களை மேம்படுத்துகிறது.

## வன உரிமைகள் சட்டம் (FRA) தொடர்பான பிரச்சினை

- சமூக வன வள மேலாண்மைத் திட்டங்கள் (CFRMP) குறித்து பழங்குடியினர் விவகார அமைச்சகம் மற்றும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC) விடுத்த தகவல்தொடர்பு, கிராம சபையின் அதிகாரங்கள் குறித்த கவலைகளை எழுப்பியுள்ளது.
- வனத்துறையின் செயல்பாட்டுத் திட்டங்களுடன் சமூக வன வள மேலாண்மைத் திட்டங்களை ஒருங்கிணைக்குமாறு மாநிலங்களை அந்த கடிதம் கேட்டுக் கொண்டு உள்ளது.
- 2006 ஆம் ஆண்டின் வன உரிமைகள் சட்டம் (FRA), சமூக வன உரிமைகளைத் தீர்மானிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் கிராம சபையை முதன்மை அதிகார அமைப்பாக அங்கீகரிக்கிறது.
- வன உரிமைகள் சட்டம் 2006 இன் பிரிவு 5-இன் கீழ், காடுகள், வனவிலங்குகள் மற்றும் பல்லுயிரியலைப் பாதுகாப்பதற்கும், பேணுவதற்கும், நிர்வகிப்பதற்கும் கிராம சபைகளுக்கு அதிகாரங்கள் உள்ளன.
- பழங்குடியினர் (STs) மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகளின் உரிமைகளை அங்கீகரிப்பதையும், வரலாற்று ரீதியான அநீதிகளைச் சரிசெய்வதையும் வன உரிமைகள் சட்டம், 2006 நோக்கமாகக் கொண்டுள்ளது.




## சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீடு (EPI) 2026

- இது தரவுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு உலகளாவிய அளவுகோலாகும்.
- மேலும், ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தின் நோக்கங்கள் போன்ற உலகளாவிய நிலைத்தன்மை இலக்குகளை அடைவதில் நாடுகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான ஒரு முக்கிய பகுப்பாய்வுக் கருவியாகவும் இது செயல்படுகிறது.
- இது மெக்கால் மெக்பெய்ன் அறக்கட்டளையின் ஆதரவுடன் யேல் மற்றும் கொலம்பியா பல்கலைக்கழக நிறுவனங்களால் உருவாக்கப்பட்டது.
- இதன் உள்ளடக்கம், மூன்று முக்கிய நோக்கங்களின் கீழ் 177 நாடுகள், 47 குறிகாட்டிகள் மற்றும் 12 சிக்கல் பிரிவுகளை உள்ளடக்கும்.

- சுற்றுச்சூழல் சுகாதாரம், சூழல் மண்டலத்தின் உயிர்ச்சக்தி மற்றும் பாவநிலை மாற்றம் ஆகியவையே மூன்று முக்கிய கொள்கை நோக்கங்கள் ஆகும்.




***சுற்றுச்சூழல் சுகாதாரம்***

- காற்றின் தரம் (PM2.5 போன்ற மாசுபடுத்திகளின் வெளிப்பாட்டை அளவிடுதல்)
- சுகாதாரம் மற்றும் குடிநீர்
- கன உலோகங்களின் வெளிப்பாடு

***சூழல் மண்டலத்தின் உயிர்ச்சக்தி***

- பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் வாழ்விடப் பாதுகாப்பு
- காடுகள் மற்றும் மர இழப்பு
- மீன்வளம் மற்றும் மீன் இருப்பு
- வேளாண்மை மற்றும் நிலையான நடைமுறைகள்
- நீர் வளங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு

***பருவநிலை மாற்றம்***

- பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல்
- பல்வேறு துறைகளிலிருந்து வெளியாகும் $CO_2$ வெளியேற்றம்
- தூய்மையான ஆற்றல் மாற்றம் மற்றும் கார்பன் அடர்த்தியைக் கண்காணித்தல்
- முதல் இடங்கள் – எஸ்டோனியா (1வது, மதிப்பெண் 74.79); அதனைத் தொடர்ந்து லக்சம்பர்க், இங்கிலாந்து, பின்லாந்து, நெதர்லாந்து (முதல் 5 இடங்கள் – அனைத்தும் ஐரோப்பாவைச் சேர்ந்தவை).
- இந்தியா 176வது இடத்தில் (மதிப்பெண் 22.46) உள்ளது, இது இரண்டாவது மிகக் குறைந்த மதிப்பெண் ஆகும்; கடுமையான காற்றின் தரம் மற்றும் பல்லுயிர் தன்மை இழப்பு.
- 2022 ஆம் ஆண்டு முதல் சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டில் (EPI) மிக மோசமாகச்

செயல்படும் ஐந்து நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகத் தொடர்ந்து இருந்து வருகிறது.

- சுற்றுச்சூழல் சுகாதாரம், காற்றின் தரம் மற்றும் பல்லுயிர் தன்மை ஆகியவற்றில் இந்தியா மோசமாகச் செயல்பட்டுள்ளது (காற்றின் தரம் மற்றும் பல்லுயிர் தன்மை ஆகிய இரண்டிலும் 174வது இடத்தில் உள்ளது).

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## FAO-இன் பீட்லேண்ட்/கரிம மண் நிலங்கள் உமிழ்வு அறிக்கை 2026

- ஐக்கிய நாடுகள் சபையின் (UN) உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO), கரிம மண் நிலங்களில் (peatlands) இருந்து வெளியேறும் பசுமைக்குடில் வாயு உமிழ்வு மதிப்பீடுகளின் துல்லியத்தை மேம்படுத்துவதற்காக Peat-Emit Report 2026 என்ற அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கை புதுப்பிக்கப்பட்ட உமிழ்வுக் காரணிகளை அறிமுகப்படுத்தியதுடன், குறிப்பாக வளரும் நாடுகளில் பருவநிலை கண்காணிப்பை வலுப்படுத்துவதற்கான தரவு இடைவெளிகளையும் அடையாளம் கண்டுள்ளது.
- கரிம மண் நிலங்கள் பூமியின் நிலப்பரப்பில் 3-4% மட்டுமே உள்ளன, ஆனால் உலகளாவிய மண் கரிம கார்பனில் சுமார் 30% ஐ (சுமார் 450-650 ஜிகா டன்கள்) சேமித்து வைத்துள்ளன.
- வடிகட்டப்பட்ட, சீரழிந்த அல்லது எரிக்கப்பட்ட கரிம மண் நிலங்கள் அதிக அளவிலான கார்பன் டை ஆக்சைடு ($CO_2$), மீத்தேன் ($CH_4$) மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு ($N_2O$) ஆகியவற்றை வெளியேற்றி, பருவநிலை மாற்றத்திற்கு பங்களிக்கின்றன.
- Peat-Emit திட்டம் வளரும் நாடுகளில் இருந்து 560 உமிழ்வு மற்றும் அகற்றுதல் தரவுப் புள்ளிகளைத் தொகுத்து, பசுமைக்குடில் வாயு மதிப்பீடுகளுக்கான ஆதார அடிப்படையை மேம்படுத்தியுள்ளது.




# மாநிலச் செய்திகள்

## முதல் அரிய பூமிக் கனிமங்கள் ஆய்வு உரிமம் – ராஜஸ்தான்

- இது ராஜஸ்தானில் உள்ள பலோத்ரா மற்றும் ஜோத்பூர் மாவட்டங்களில் பரவியுள்ளது.
- தேசிய முக்கிய கனிமங்களின் கட்டமைப்பின் கீழ், இது மத்திய சுரங்கத் திட்டமிடல்

மற்றும் வடிவமைப்பு நிறுவனத்திற்கு (CMPDI) வழங்கப்பட்டுள்ளது.

- புவியியல் ஆய்வுகள், ஆய்வுத் தொகுதிகளில் லாந்தனம், சீரியம், பிரசியோடைமியம் மற்றும் நியோடைமியம் ஆகியவை இருப்பதைக் குறிப்பிடுகின்றன.
- அரிய மண் தனிமங்கள் மின்சார வாகனங்கள் (EVs), புதுப்பிக்கத்தக்க ஆற்றல், பாதுகாப்பு, விண்வெளி, குறைக்கடத்திகள், மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு ஆகியவற்றில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.




## விளையாட்டுச் செய்திகள்

### நீதிபதி எம்.எஸ்.லிபரான் மறைவு




- ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் மற்றும் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியான எம்.எஸ்.லிபரான் தனது 87ஆவது வயதில் சண்டிகரில் காலமானார்.
- 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 6 அன்று நிகழ்ந்த பாபர் மசூதி இடிப்பு குறித்து விசாரிக்க

அமைக்கப்பட்ட லிபரான் ஆணையத்திற்கு நீதிபதி லிபரான் தலைமை தாங்கினார்.

- லிபரான் ஆணையம் கிட்டத்தட்ட 17 ஆண்டுகளுக்குப் பிறகு தனது அறிக்கையை சமர்ப்பித்தது என்பதோடு இது இந்தியாவின் மிக நீண்ட காலம் செயல்பட்ட விசாரணை ஆணையங்களில் ஒன்றாகும்.
- இவர் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியாக இருந்தார் மற்றும் ஆந்திரப் பிரதேசம் மற்றும் மெட்ராஸ் உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதியாகவும் பணியாற்றினார்.
- நீதிபதி லிபரான் தனது நீண்டகால நீதித்துறை சேவைக்காகவும், சட்டத்தின் ஆட்சி மற்றும் இந்திய நீதித்துறைக்கான தனது பங்களிப்பிற்காகவும் அறியப்பட்டவர்.

### COSPAR விக்ரம் சாராபாய் பதக்கம் 2026

- விண்வெளி ஆராய்ச்சிக்கான தனது பங்களிப்பிற்காக வானியற்பியல் அறிவியலாளர் அன்னபூர்ணி சுப்பிரமணியம் 2026 ஆம் ஆண்டிற்கான COSPAR விக்ரம் சாராபாய் பதக்கத்தைப் பெற்றார்.
- இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை டாக்டர் விக்ரம் சாராபாய் அவர்களை கௌரவிக்கும் வகையில் விக்ரம் சாராபாய் பதக்கம் 1990 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- வளரும் நாடுகளைச் சேர்ந்த அறிவியலாளர்களுக்கு விண்வெளி ஆராய்ச்சிக்கான குழு (COSPAR) மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) ஆகியவை இணைந்து இந்தப் பதக்கத்தை வழங்குகின்றன.
- இந்தப் பதக்கத்தைப் பெறும் 4வது இந்தியர் மற்றும் முதல் இந்திய பெண் அறிவியலாளர் என்ற பெருமையை அன்னபூர்ணி சுப்பிரமணியம் பெற்றுள்ளார்; மேலும் இவ்விருதைப் பெறும் மூன்றாவது பெண் இவராவார்.
- யு.ஆர்.ராவ் (1996), குர்பக்ஸ் சிங் லகினா (2014), மற்றும் அனில் பரத்வாஜ் (2024) ஆகியோர் இந்தப் பதக்கத்தைப் பெற்ற பிற இந்தியர்கள் ஆவர்.





## முக்கிய தினங்கள்

### இந்திய உடல் உறுப்பு தான விழிப்புணர்வு தினம் 2026 – ஆகஸ்ட் 03

- உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், மக்கள் தங்கள் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வருவதை ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3 அன்று புது தில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ

அறிவியல் கழகத்தில் (AIIMS) உயிரிழந்த கொடையாளரிடம் இருந்து பெறப்பட்ட இதயத்தை வெற்றிகரமாக மாற்று அறுவை சிகிச்சை செய்த முதல் நிகழ்வை இந்த நாள் நினைவுகூருகிறது.


- உடல் உறுப்பு தானம் என்பது உயிரைக் காப்பாற்ற அல்லது மேம்படுத்த ஆரோக்கியமான உறுப்புகளை (சிறுநீரகங்கள், கல்லீரல், இதயம், நுரையீரல், கணையம் மற்றும் குடல்) அல்லது திசுக்களை (கருவிழி, தோல், எலும்பு மற்றும் இதய வால்வுகள்) தானம் செய்வதை உள்ளடக்கியதாகும்.
- இந்தியாவில் உடல் உறுப்பு தானமானது மனித உறுப்புகள் மற்றும் திசுக்கள் மாற்று சட்டம் (THOTA) மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது மற்றும் கடுமையான மருத்துவ மற்றும் சட்ட நடைமுறைகளைப் பின்பற்றுகிறது.
- சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் (MoHFW) கூற்றுப்படி, வளர்ந்து வரும் பொது விழிப்புணர்வை பிரதிபலிக்கும் வகையில், 2026 ஆம் ஆண்டில் 5 லட்சத்திற்கும் அதிகமான உடல் உறுப்பு தான உறுதிமொழிகளை இந்தியா பதிவு செய்துள்ளது.




## சர்வதேச படைச் சிறுத்தை பாதுகாப்பு தினம் 2026 - ஆகஸ்ட் 04

- இந்த தினமானது படைச் சிறுத்தைகளின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- பெரிய பூனை இனங்களில் மிகச்சிறியதான படைச் சிறுத்தையானது நிலப்பரப்பு படைச் சிறுத்தை (நியோஃபெலிஸ் நெபுலோசா) மற்றும் சுண்டா படைச் சிறுத்தை (நியோபெலிஸ் டியார்டி) என இரண்டு வகைகளை உள்ளடக்கியது.
- வாழ்விட இழப்பு, சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகம் மற்றும் மனித-வனவிலங்கு மோதல் ஆகியவற்றின் காரணமாக இவ்விரண்டு இனங்களும் இயற்கை பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.
- இந்தியாவின் பாதுகாப்புச் செயல் திட்டம் (CAP) 14 முன்னுரிமை நிலப்பரப்புகள்,

வாழ்விடப் பாதுகாப்பு, அறிவியல் கண்காணிப்பு, வேட்டையாடுதல் தடுப்பு நடவடிக்கைகள், சமூகப் பங்கேற்பு மற்றும் பருவநிலை தாங்கும் பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★